# இலக்கியங்களில் இடம்பெறும் பதிவுகளும் புதுமைகளும்

*முனைவர் நா. ரா. ஷிபஜா*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு
https://doi.org/10.5281/zenodo.15526553

**ஆய்வுச்சுருக்கம்**

*சங்க இலக்கியங்களில் பல பண்பாட்டுப் பதிவுகள் காணப்படுகின்றன. ஏனெனில் மனிதனிடம் அறிவு, ஆற்றல், ஆக்கத்திறன், எண்ணம், உயர்வு என பல அடங்கியுள்ளன. இலக்கியம் மனத்தைப் பக்குவப்படுத்தி மகிழ்வூட்டும். அதுபோல மக்களும் ஒரு குடும்பப்பெண்ணாக பலவகைகளில் பக்குவப்பட்டுக் காணப்படுகிறாள். முனையற மகளிர்க்கு முதன்மையான கடமையே விருந்தோம்பலாகும் சங்ககால மகளிர் நள்ளிரவில் விருந்தினர்வரினும் முகம் சுளிக்காமல் விருந்து செய்வர். ஆனால் இன்று பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இன்றைய சூழலில் குறைந்தே காணப்படுகிறது. அதுபோல் சங்ககாலத்தில் மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு அன்புடனும் ஒற்றுமையுடனும் வாழ்கின்றனர். ஆனால் இன்று ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழும் சூழல் அமையவில்லை. மேலும் இதில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடுஇ கற்பின் சிறப்பு பெண்மை போற்றும் பண்பு என பலவும் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் பதிவுகளையும்இ பண்பாடுகளையும் அதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் கூறப்பட்டுள்ளன. தமக்கென முயலாது பிறர்க்கென வாழ்ந்து கொண்டிருத்தல்இ கிடைத்தற்கரிய அமுதமே கிடைப்பினும் தாமே உண்ணாது பிறருடன் கலந்து உண்ணுதல்இ தீயவற்றிற்கு அஞ்சுதல்இ தம் செயலால் புகழ் உண்டாகுமானால் உயிரையும் கொடுத்து கடனாற்றுதல்இ உலகத்தையே கொடுத்தாலும் பழிச்செயலை செய்யாதிருத்தல்இ தாம் மேற்கொண்டுள்ள சருமத்தில் முயற்சியோடு இருத்தல் என்பனவற்றையும் பண்பாடுகளாகவே கொள்ள வேண்டும்.*

## முன்னுரை

*மனித சமுதாயத்தின் மேன்மை அதன் மாற்றத்தில், வளர்ச்சியில் இருக்கின்றது. தேக்க நிலையில் இருக்கும் சமுதாயம் வளராது. ஒட்ட நிலையில் காலச்சூழலுக்கேற்ப மாறும் சமுதாயம் வளரும் உயரும். ஏனெனில் மனிதனிடம் அறிவு, ஆற்றல், ஆக்கத்திறன், ஆவல், எண்ணம், உயர்வுள்ளல் ஆகியவை அடங்கியுள்ளன. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அதன் பண்பாட்டின் நிலையிலிருந்து அறியலாம். சங்க இலக்கியங்களில் பல பண்பாட்டுப் பதிவுகள் காணப்படுகின்றன. அப்பண்பாட்டு பதிவுகளையும், அப்பண்பாட்டில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்களும் புதுமைகளும் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.*

## விருந்தோம்பல்

*பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே இல்லறத்தின் தலையாய நெறியாகும். விருந்தோம்பல் இல்லாத வாழ்க்கை இல்வாழ்க்கை ஆகாது. விருந்தோம்பலில் பெண் பெரும் பங்கு பெறுகிறாள். இதனை,*

> ***"நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்"***
> ***ஜதிரிகடுகம் இரண்டாம் தொகுதி பக்கம் 597 பா. எண் 64 வரி -1ஸ***

*என திரிகடுகம் எடுத்துரைக்கின்றது.*

மனையற மகளிர்க்கு முதன்மையான கடமையே விருந்தோம்பலாகும். இதற்கு வள்ளுவர் ஓர் அதிகாரத்தையே தந்துள்ளார். விருந்தோம்பல் தலைவியின்றி நிகழ முடியாது. ஆதலின் தலைவியினுடைய மாண்புகளாக விருந்தோம்பலையும் சுற்றம் ஓம்பலையும் தொல்காப்பியர்,

***"கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் ஓம்பலும்***
***விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்***
***பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"***
***தொல்காப்பியம் கற்பியல் ஆசிரியர் தமிழண்ணல்***
***பக் 200 பாடல் எண் 1098***

குறிப்பிடுகின்றார். "விருந்து" என்னும் சொல் "புதுனம்" என்று பொருள்படும். விருந்தோம்பல் என்பது இல்லம் தேடிப் புதிதாக வருபவர்களை இன்முகத்துடன் வரவேற்று இனிய மொழகள் பேசி உபசரித்துப் போற்றுவதாகும்.

சங்க கால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வரினும் முகம் சுளியாது அவர்களை எதிர்கொண்டு வரவேற்று விருந்து வெய்வர் என்பதனை நற்றினை,

***"அல்லில் ஆயினும் விருத்துவரின் உவக்கும்***
***முல்லை சான்ற கற்பின்***
***மேல்லியல் குறுமகள் உறைவின் ஊரே"***
***நற்றினை ஆசிரியர் முனைவர் கதிர் மகாதேவன்***
***பக் 188 பா.எண் 142 வரி 9-11***

என்று கூறுகிறது. இரவுப் பொழுதில் கதவை அடைப்போர் விருந்தினாகளை எபசரித்து விட்டுஇ பின்னும் யாரேனும் வருவார் உளரோ என்று வினவி, ஒருவரும் இல்லை என்பதை அறிந்த பின்னரே கதவை அடைப்பர் என்பதைக் குறுந்தொகை,

***"நள்ளென வந்த நார் இன் மாலைப்***
***புலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்***
***வரவீர் உளரோ?எனவும்"***
***குறுந்தொகை ஆசிரியர் உ.வே.சா.***
***பக் 232 பாடல் எண் 118***

கூறுகிறது. பிரிந்து சென்ற தலைவன் திரும்பி மனைக்கு வருங்கால் அவருக்கும் விருந்து கொடுக்கும் மரபு வழக்கில் இருந்தது. தலைவன் வருகையை முன்னரே, தூதாக வந்த பாணானும், பாகனும், அறிவரும் விருந்து பெறுவர்.

மகளிர் தம் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு விருந்தின் பொருட்களை அமைத்துக் கொள்வர். வீட்டில் இருந்த வரகும், தனையும் தீர்ந்து விட, அந்த நேரத்தில் வந்த இரவலர்க்கு, விதைக்கு எடுத்து வைத்த தினையை உரலில் இட்டுக்குத்தி உணவாக்கி விருந்து படைத்து மகிழ்ந்தான் என்பதைப்

***"வரகும் தினையும் உள்ளவை எல்லாம்***
***இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்***
***குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்இ***
***குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து"***
***புறநானூறு ஆசிரியர் புலியூர் கேசிகள்***
***பக் 373 பா. எண் 333 வரி 9-12***

புறநானூறு குறிப்பிடுகிறது. விருந்தினரைப் போற்றி வரவேற்று விருந்து செய்வதை எளிய குடும்பப் பெண்களும் தம்முடைய தலையாயக் கடமையாகவே கொண்டனர்.

பொருளையெல்லாம் இழந்த வறுமையுற்ற காலத்தும் விருந்தினரைச் சிறப்பாக ஓம்புதலைச் சங்ககால மக்கள் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். வறுமையுற்று விருந்தோம்பநிலையிலும் ஒரு குடிமகன் வீட்டிற்கு விருந்தினர் வந்தனர். தன்னிடம் வேறு பொருள் இன்மையால் பழமையானது என்று போற்றப்பட்ட தன் விாளை அடமானம் வைத்து உணவு படைத்தான். மறுநாளும் விருந்தினர் வந்தனர். இப்போது தன் யாழை பணயமாக்கினான் என்பதைப் புறநானூறு பாடல் ஒன்று விளக்குகின்றது. அவை,

***"நெடுநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்***
***இரும்புடைப் புழவாள் வைத்தனன் இன்றுஇக்***
***கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்"***
***புறநானூறு ஆசிரியர் புலியூர் கேசிகன்***
***பக் 357 பா.எண் 316 வரி 5***

"குடிமக்கள் காப்பியம்" என்று போற்றப்படும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி கணவனைப் பிரிந்தமைக்க வருந்தியதைக் காட்டிலும்,

***"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்,***
***துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்***
***விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"***
***சிலப்பதிகாரம் கொலைக்களக் காதை ஆசிரியர் புலியூர்கேசிகன் பக்கம் 246 பா. எண் 9 வரி 71-73***

*என்று அறநெறியாளர்களுக்கு உணவளிக்க முடியாமலும்இ அற அந்தணர்களைப் பேண முடியாமலும்இ துறவிகளை வரவழைத்து உபசரிக்க முடியாமலும் விருந்தினர்களை உதிரேற்று அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து உபசரிக்க முடியாத நிலை ஏற்ப்பட்டதாலும் தான் வருந்தியதாக கோவலனிடம் கண்ணகி கூறுகிறாள். இதனால் கணவன் துணையோடு மனைவி மனையறமாகிய விந்தோம்பல் செய்ய வேண்டும் என்பது அறிய முடிகிறது.*

*பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இன்றைய சூழலில் விருந்தோம்பல் சிறப்பு தற்போது குறைந்தே காணப்படுகிறது. யாரும் யார் வீட்டிற்கும் செல்லக்கூட நேரமில்லாத சூழ்நிலையே அதிகம் காணப்படுகிறது. புதிதாக வருபவர்களை நம்பி வீட்டுக்குள் அனுமதிக்கக் கூட முடியவில்லை. பாதுகாப்பு பற்றய பயமும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது.*

**சுற்றம் ஓம்புதல்**

*உறவினர்களாகிய சுற்றத்தார்க்கு உணவு மற்றும் தேவையான எல்லாம் தந்து பாதுகாத்தல் "சுற்றம் ஓம்புதல்" எனப்படும். தலைவன் இதற்காகவே பொருள்வயிற்பிரிவை மேற்கொள்வான். சுற்றத்தாரிடம் பிழை காணப்பட்டாலும் அதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஔவையாரும் "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று குறிப்பிடுகிறார். வள்ளுவரும் "சுற்றந்தழால்" என்னும் ஓர் அதிகாரத்தையே வகுத்துத் தந்துள்ளார்.*

*ஆய் மகள் ஒருத்தி மோர் விற்றதனால் கிடைத்த நெல்லைக் கொண்டு எல்லோரையும் உண்ணச் செய்தான் என்பதை,*

***"நான் மோர் மாறும் நன்மா மேனிச்***
***சிறுகுழை துயல் வருடம் காதின் பணைத்தோள்***
***குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்***
***அளைவிலை உணவின் கிளையுடன் அருத்தி***
***நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளான்***
***எருமை நல்லான் கருநாகு பெறூஉம்"***
***பெரும்பாணாற்றுப்படை ஆசிரியர் வித்துவான் ஆ. நாராயண வேலுப்பிள்ளை பக் 161 பா.எண் 160-165***

*என்று கூறுகிறது. சுற்றத்தினர் முன்பு எதற்கும் விட்டுக் கொடுத்துஇ அனுசரித்துஇ ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழும் சூழ்நிலை இன்று அமையவில்லை. அவர்களை ஏளனமாக பார்க்கும் நிலை இன்று எத்தனையோ குடும்பங்களில் நடைபெறுகிறது.*

**கற்பின் சிறப்பு**

*தமிழரின் உயர்ந்த பண்பாடாகக் கருதப்படுவது ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடாகும். சங்ககாலத் தலைவி இப்பண்பாட்டினைத் தன் உயிரினும் மேலாகப் போற்றுகிறாள். அழகிய கண்களையும் தாவுதலையும் உடைய ஆண்குரங்கு இறந்துவிட கைம்மைத் துயரை தாங்க முடியாத பெண் குரங்கு வாழ விரும்பாமல் மலை உச்சிக்குச் சென்று உயிர் விடும். அதுபோல தலைவன் இல்லை என்றால் தலைவி உயிர் வாழ விரும்பமாட்டாள். இது மட்டுமல்லாமல் இப்பிறவியில் மட்டுமல்ல, இனிவரும் மறுபிறப்பிலும் இதே தலைவனே தனக்குக் கணவனாக வர வேண்டும் என்பதையே தலைவி விரும்புகிறாள் என்பதை,*

***"இம்மை மாறி மறுமை யாயினும்***
***நீயாகிய ரென் கணவனை***
***யானா கியார்நின் னெஞ்சு நேர்பவளே"***
***குறுந்தொகை ஆசிரியர் உ.வே.சா***
***பக் 107 பாடல் எண் 49***

*என்ற பாடல் குறிப்பிடுகிறது.*

*மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் திருமண உறவுமுறை தமிழர்களிடையே கற்பின் பெருமையை உணர்த்துகிறது.*

*நாற்குடியில் பிறந்த மகளிர் விரும்பியவனையன்றி வேறொருவனைத் திருமணம் செய்து கொள்ளார் என்ற கற்பின் சிறப்பினை,*

***'விரிநீர் உடுக்கை எலகம் பெறினும்***
***அருநெறி ஆயர் மகளிர்க்கு***
***இருமணம் கூடுதல் இல் இயல்பு அன்றேb***
***கலித்தொகை ஆசிரியர் முனைவர் சு.ப அண்ணாமலை பக் 461 பா எண் 114:19-27***

*என்ற இப்பாடல் வழி அறிய முடிகின்றது.*

ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடும் இன்று சற்று தளர்ந்து விட்டதோ என்றே எண்ணத் தோன்றுகிறது. தன் விருப்பத்திற்கு மட்டுமே அதிகமான முக்கியத்துவம், சொந்த பந்தங்களைப் பற்றிய எண்ணமின்மை, எதிர்பார்ப்புகள் அதிகரிப்பு, எதற்கும் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போகாத தன்மை என இவையெல்லாம் கூட ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு தளர்வடையக் காரணங்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**பெண்மை போற்றும் பண்பு**

மென்மையான உள்ளத்துமன் தவறையும் பொறுத்துப் போகும் பண்பு பெண்களிடம் இயல்பாகவே எள்ளது. இது பண்டைய தமிழ் மக்களின் குறிப்பிடத் தக்க கண்பாடுகளில் மிகச் சிறந்ததாகும். தலைவன் தலைவியை விட்டுப்பிரிந்து பரத்தையிடம் சென்றாலும் தலைவி, தலைவனை மன்னித்து மறந்து அவனை ஏற்றுக் கொள்ளும் இயல்புடையவளாகவே இருக்கிறாள் என்பதை,

> ***"காஞ்சியூரன் கொடுமை***
> ***கரந்தன் ளாகலி னாணிய வருமே"***
>
> ***குறுந்தொகை ஆசிரியர் உ.வே.சா***
> ***பக்கம் 26 பாடல் எண் 10***

என்ற பாடல் குறிப்பிடுகிறது. தலைவனின் இந்த பண்பை உயிர்த் தோழியிடம் கூட தலைவி கூறமாட்டாள். இதனால் தலைவனுக்குத் தலைகுனிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதாகும். ஒரு வேளை சில நேரங்களில் தலைவியே தலைவனை ஏற்க மறுத்தாலும் தோழி அவளுக்குப் பலவிதமாக அறிவுரை கூறி ஏற்றுக்கொள்ளும்படி செய்வாள்.

ஆனால் இன்றைய சூழலில் பொறுமை என்பது பெண்களிடத்தில் குறைந்து விட்டது. தலைவன் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருக்கிறான் என்பதை அறிந்த தலைவி அவனை ஏற்றுக் கொள்ளமாட்டாள். அவனை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் மனநிலையிலும் இருப்பது இல்லை. உடனே விவாகரத்து வரையிலும் சென்று விடுகின்றனர். சுதந்திரம் பெற்றுவிட்ட பெண்கள் இதனை நேரடியாகவே எதிர்க்கின்றனர்.

**கற்பு நிலைப்பாடு**

களவு நெறியிலிருந்து கற்பு நெறிக்குச் செல்லும் வாழ்வியல் முறையினைச் சித்தரிப்பதில் தனியிடம் பெறுவது அறவாழ்க்கையாகும். அறம்-ஒழுக்கம் தான் கொடை ஒழுக்கத்தின் கண் நிற்றலை அறத்தொடு நிற்றல் என்பார்கள். ஒத்த தலைவன் தலைவியரிடையே அரும்பும் களவுக் காதல், கற்பு மணமாக நிறைவு பெற வேண்டும் என்பதே தமிழ் மக்களின் குறிக்கோளாகும். அது அறம் எனக் கூறப்பட்டது. தான் கொண்ட ஒழுக்கத்தின் கண் வழவாது நிற்றலே அறமாகும். தோழியும், செவிலியும் தலைவியின் வேறுபாட்டைப் பல படியாக ஆராய்வார்கள். தலைவியின் மேல் கொண்ட அன்பின் காரணமாக அவளுக்கு நல்வாழ்வு வகுக்கக் கூடிய பொறுப்பினை உடையவர்களாகவும் இருப்பதால் அவர்களிடம் தலைவி அறத்தொடு நிற்பாள். இதனை,

> ***"பன்னூற வகையினும் தன்வயின் வரூஉம்***
> ***நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்***
> ***துணைச் சுட்டுக் கிளவி கிழவியதாகும்***
> ***துணையோர் கருமம் ஆகலான்"***
> ***தொல்காப்பியம் பொருள் களவில் ஆசிரியர் தமிழண்ணல் பக் 161 பா.எண் 1069***

என்னும் நூற்பாவால் அறியலாம். மேலும் தலைவியின் மாறாத அன்பு, தலைவனைத் தவிர வேறோர் ஆடவனைக் கனவிலும் நினைக்காத அவளின் உறுதியையும், தோழியின் அறிவுத் திறனையும், நற்றாய் செவிலித்தாயின் உயர்ந்த பண்புகளையும் அறத்தொடு நிற்றல் கூட்டுகிறது.

**திருமணம்**

தலைவனும் தலைவியும் தம் காதலுக்கு எதிர்ப்பு வந்த காலத்துப் பெற்றோரின் ஒப்பதலின்றி ஒருமித்தக் கருத்துடன் வீட்டை விட்டு வெளியேறும் செயலே "உடன்போக்கு" எனப்டும். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காதலித்து, களவொழுக்கம் ஒழுகி இருவரும் மணம் செய்து கொள்ள விரும்புவதைத் தலைவியின்

*பெற்றோர் அறிந்து, அவள் விருப்பத்தின்படி அவனுக்கே மணம் செய்து கொடுப்பர்.*

*ஒரு சில பெற்றோர் களவொழுக்கத்தை அறியாதும், அறிந்து அதற்கு உடன்படாதும் தலைவி தலைவனைச் சந்திக்கக்கூடாது என்பதற்காக வெளியே செல்லவிடாது வீட்டிற்குள் வைத்து காவல் காத்து வருவர். இதனால் தலைவனை காணமுடியாத தலைவி பிரிவாற்றாமையால் பெரிதும் வருந்துவாள். தலைவியின் விருப்பத்தின் படியே தோழி, தலைவியை தலைவனுடன் உடன் போக்காக அனுப்புவாள். உடன்போக்கில் தான் கற்பு மேம்பாடு உள்ளது. பிரிவுதான் தலைவனைக் கடமையுள்ளவனாகவும், தலைவியைக் கற்புள்ளவளாகவும் காட்டத் தேவையான ஒன்றாகிறது. உடன்போக்கு ஒரு வகையான திருமணமேயாகும். இதனை,*

***"கொடுப்போர்இன்றியும் கரணம் உண்டே***
***புணர்ந்துடன் போகிய காலையான்"***
***தொல்காப்பியம் கற்பியல் ஆசிரியர் தமிழண்ணல்***
***பக் 182 பா.எண் 1089***

*என்று தொல்காப்பிய நூற்பகுறிப்பிடுகின்றது. இருவரும் ஒரே குலமாக இருப்பின் திருமணம் செய்து வைப்பர் என்றும் உடன் போக்காக தலைமக்கள் சென்று விட்டாலும் அவர்களை ஏற்றுக் கொள்வார்கள்.*

*தலைவனும் தலைவியும் ஒருவர்மேல் ஒருவர் வைத்துள்ள அன்பைத் தொடர விரும்பியே உடன் செல்கின்றனர். ஆனால் இன்று உடன்போக்கு என்ற நிலையை அவர்களின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் "ஓடிப்போனவள்" என்று பெயரிட்டு அழைத்து அவர்களைக் கேவலப்படுத்துகிறார்கள்.*

## சிலம்பு கழி நோன்பு

*"மணம் புரிவதற்கு முன்", மணமகளது காலில் பெற்றோர்களால் அணியப்பட்ட சிலம்பை நீக்குவதற்கு ஒரு சடங்கு செய்யப்படும். அது "சிலம்பு கழி நோன்புசு எனப்படும். ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை அறிவதற்கு காலில் மெட்டி அணியப்படும். ஆனால் இன்று சிலம்பும் அணிவதில்லை, சிலம்பு கழி நோன்பும் நடைபெறுவதில்லை. பெண்கள் கொலு, மணமாவதற்கு முன்பும் பின்பும் அணிகின்றனர்.*

## முடிவுரை

*மக்களின் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் பண்பாடு வாழ்வியற்கூறாக அமைகிறது. தமிழர்கள் தங்கள் பண்பாட்டை அன்று முதல் இன்று வரை நிலைநாட்டி வருகின்றனர். மேலும் சங்ககாலப் பண்பாட்டு பதிவுகளை ஒப்பிட்டு நோக்கும் போது இன்று அதில் பல மாற்றங்களும் அமைந்துள்ளன என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது.*

## துணை நின்ற நூற்கள்


1. *திரிகடுகம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தொகுதி 2, புதிய பதிப்பு 2007. தமிழ் நிலையம் 40, சரோஜினி தெரு, தியாகராயநகர், சென்னை*
2. *தொல்காப்பியம் கற்பியல் ஆசிரியர் முனைவர் தமிழண்ணல் முதற்பதிப்பு செப்டம்பர் 2003 மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை*
3. *நற்றினை ஆசிரியர் முனைவர் கதிர் மகாதேவன் முதற்பதிப்பு நவம்பர் 2003 கோவிலூர் மடாலம் கோவிலூர்*
4. *குறுந்தொகை ஆசிரியர்டாக்டர்உ.வே.சா முதற்பதிப்பு 2009. டாக்டர் உ.வே.சா நூல்நிலையம் 2, அருண்டேல் கடற்கரைச் சாலை பெசன்ட் நகர் சென்னை*
5. *புறநானூறு ஆசிரியர் புலியூர்க்கேசிகன் முதற்பதிப்பு 1958 பாரி நிலையம் 184, பிராட்வே, சென்னை*
6. *சிலப்பதிபாரம் ஆசிரியர் புலியூர்க்கேசிகன் முதற்பதிப்பு 1958 பாரி நிலையம் 184, பிராட்வே, சென்னை*
7. *பெரும்பாணாற்றுப்படை வித்துவான் ஆ. நாராயண வேலுப்பிள்ளை முதற்பதிப்பு 1994, பாரி நிலையம் முல்லை நிலையம் சென்னை*
8. *கலித்தொகை முனைவர் சுப. அண்ணாமலை முதற்பதிப்பு ஏப்ரல் 2003 கோவிலூர் மடாலம் கோவிலூர்*